நிலக்கோட்டை வட்டாரத்தில் சிவந்திப்பூ உற்பத்தி

*787 வினா. திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டாரத்தில் தரம் மிக்க "சிவந்திப்பூ" அதிகம் உற்பத்தியாகிற தென்பது உண்மையா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 300 எக்கர் பரப்பளவில் சிவந்திப் பூ பயிரிடப்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை : நிலக்கோட்டை பகுதியில் சிவந்திப்பூவை விட கனகாம்பரம் நன்ருக வளர்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனகாம்பரம் கோயம் பத்தூர், சென்னை, மதுரை முதலிய இடங்களில் 300 எக்கராக்களில் பயிரிடப்படுகிறது. மேலும் பயிரிடுவதற்கான திட்டம் இப்போது இல்லை.

திரு. த. சோனையா : மதுரை மாவட்டம் நிலக்கோட்டைப் பகுதியில் சிவந்திப்பூ அதிகமாக உற்பத்தி செய்வதாகச் சொன்ஞர்கள். அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற பூக்களுக்கு மார்க்கெட் இல்லாத காரணத்திஞல், அவற்றை வெளி மாநிலங்களுக்கு அனுப்ப அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போது வளர்க்கப் படுகிற சிவந்திப்பூக்களில் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு லாபம் வருவதாகச் சொல்லுகிருர்கள். இந்தியாவில் உள்ள பல மாநிலங் களுக்கு லாரி மூலமும், பஸ் மூலமும், விமானம் மூலமும் இப்போது அனுப்பப்பட்டு வருகிறது. வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் திட் டத்தையும் இப்போது ஆராய்ந்து வருகிருர்கள்.

திரு. சொ. காவேரி மணியம் : தலைவர் அவர்களே, மதுரை மாவட் டத்தில் மதுரையின் தென்பகுதியிலே இம்மாதிரியான வாசனை மிகுந்த பூக்கள் பயிரிடப்படுகின்றன. அகில பாரதம் முழுவதற்கும் விமானம் மூலம் பூக்கள் அனுப்பப்படுகின்றது. ஆகவே அதைப் பயிரிடுபவர்களுக்கு மானியம் ஏதாவது தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, வாசனைப் பொருள்களுக்கென்று தனியாக மானியம் ஒதுக்க வில்லை. மல்லிகை, ரோஜா, சிவந்தி போன்றவைகளுக்கு நீண்ட காலக் கடஞக 3 ஆயிரம் ரூபாயும், குறுகிய காலக் கடஞக மல்லிகைக்கு 800 ரூபாயும், ரோஜாவுக்கு 450 ரூபாயும், சிவந்திக்கு 150 ரூபாயும், கனகாம்பரத்துக்கு 140 ரூபாயும் உதவிப் பணம் தர பரிசீலிக்கப்படுகிறது வாசனைப் பொருள்களுக்கென்று தனியாக மானியம் எதுவும் தரப்படவில்லை

1972 மார்ச் 29]

கல்லாரிலுள்ள அரசுப் பழத் தோட்டம்

*788. வினா. திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் அரசினர் பழத் தோட்டதை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மே. சி. தூயமணி : தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் அரசினர் பழத் தோட்டம் 90 ஆண்டுகளுக்கு முன்னாலே துவக்கப்பட்டது. பண்டித நேரு அவர்களால் பாராட்டப்பட்டது. அந்தத் தோட்டத்தை விரிவுபடுத்துவது நல்லது. அதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்று வருகின்ற நிலைமையில் மேலும் இதற்கான விருத்தி செய்கின்ற அளவில் அரசு இல்லை. பக்கத்தில் காடுகள் இருக்கின்ற காரணத்தால், இதை விரிவு செய்ய முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, கல்லார் பழத் தோட்டத்திலே கொக்கோ பயிரிடுவது என்கிற திட்டம் இருந்து, அதற்காக நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆனது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, கல்லார் பழத் தோட்டத்திலே பழ ஜாம்கள், பழச்சாறு, பழத்திலிருந்து கிடைக்கும் பொருள்களைச் செய்து பொது மக்களுக்கு விற்பனை செய்கிறார்கள். அதை நாமே நல்ல முறையில் தமிழகம் எங்கும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய அதை விருத்தி செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதற்கென சில முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு இருக்கின்ற பரப்பளவிலே இன்னும் நல்ல முறையிலே அதிகமான பழ மரங்களை உற்பத்தி செய்கின்ற முறையிலே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. முடிந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோலப் பழப் பொருள்கள் நம்முடைய மாநிலம் எங்கும் உள்ள மக்களுக்குக் கிடைக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.